முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1137

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

09.11.2022, புதன்கிழமை

1. அறமாக வாழுகின்ற வள்ளலே
அன்னதான சேவையாற்றும் அண்ணலே
வரமாக உந்தனுள் யானிருந்து
வழிநடத்துகின்றேன் ஆறுமுகன் யானும் இனிதே
2. இனிதே அரங்கன் உந்தனுக்கு
இயம்பிடுவேன் ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் ஐப்பசி மாதம் 23 ம் நாள் 09.11.2022 புதன்கிழமை)
துணிவுகொண்டு உன் தவபலத்தை
துயர்நீக்கும் சக்தியாக உலகினில் மாற்றி
3. மாற்றியே அன்னதான சேவையாக
மக்களுக்கு பசி பிணி விரட்டுகின்ற அற்புதம்
அற்புதம் நிகழ்த்துகின்ற அரங்கனே ஆற்றல்பட உந்தனுள் யானிருந்து
மாற்றத்தை உலகினில் செய்து முடிப்பேன் மண்ணுலகே ஞான ஆட்சி பெற வகைசெய்வேன்
4. வகையாக உன்னை குருவாக ஏற்று
வணங்கிவரும் மக்கள் படை மூலமே
மிகையாக ஞானலோக மாற்றம் செய்து
மேலவர்கள் மெச்ச அரங்கன் உன் அவதாரத்தை பூர்த்தி செய்வேன்
5. பூர்த்திசெய்ய இந்த மண்ணுலகில்
புண்ணியத்தை உன் வழி பெருக்கிக் கொண்டு
நேர்த்தியாக மக்களை எல்லாம் தயவுமிக்கவர்களாக
நிலவுலகில் வாழும் ஞானிகளாக மாற்றி
6. மாற்றியே அற்புதம் நிகழ்த்துவேன்
மகான் உன் பதம் பணிந்த மக்களைக் கொண்டு தான்
கொண்டுதான் இந்த மாற்றம் செய்வேன் மண்ணுலகோர் அன்னதனால் உன் பதம் பற்றி
ஆற்றல்பட எந்த தயக்கமும் கொள்ளா அரங்கா முருகா என வந்தால் போதும்
7. போதுமப்பா உலகினில் அரங்கன் உன் அவதாரம்
புண்ணிய வழிகொண்டே மாற்றமாகி
பூதலமே ஞான ஆட்சி பெறும்
புதுமைபட உன் அவதாரம் பூர்த்தியாகும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–